தொல்காப்பிய மன்றம் - கனடா

Association for Tolkappiyam - Canada

தொல்காப்பிய வழி, தொன்மைத் தமிழர் வரலாறும் பண்பாடும் அறிவோம்

பிரிவு - 1 (2017 இற்குப் பின் பிறந்தோர்)

# என் குடும்பம்

என் குடும்பம் ஓர் அழகான சிறிய குடும்பம், அன்பான குடும்பம்.

என் குடும்பத்தில் நானும், என் அப்பா, அம்மா, அக்கா, அண்ணா என ஐந்து பேரும் இருக்கிறோம்.

அம்மாவும் அப்பாவும் எம்மிடம் மிக்க அன்புள்ளவர்கள். அவர்கள், எமது நலனில் அக்கறை கொண்டவர்கள், கண்டிப்பும் மிக்கவர்கள். அன்பு, பண்பு, பாசம் முதலியவற்றை அவர்கள், எமக்குச் சொல்லித் தருவார்கள். எம் பெற்றோரே நாம் கண்ட முதல் கடவுள். இதனையே ஔவைப் பாட்டியும் "அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்" என்றார்.

எமது தாத்தாவும் பாட்டியும் எம்முடன் வசிக்கிறார்கள். அவர்கள் எமக்கு கதைகள் சொல்லுவார்கள்.

எமக்கு மாமா, மாமி, சித்தி, சித்தப்பா, பெரியம்மா, பெரியப்பா ஆகிய நெருங்கிய உறவினர் இருக்கிறார்கள். நாம், பண்டிகை நாட்களில் அவர்கள் வீட்டிற்குச் செல்வோம்.

எனக்குத் தமிழ் படிக்க விருப்பம். நான் வீட்டில் தமிழில் கதைக்கிறேன்.

நாம் தமிழைப் படித்து தமிழராய் வாழ்வோம்.

வாழ்க தமிழ்.

நன்றி, வணக்கம்